ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:



(உலகம் உய்ய வந்த இராமாநுச வள்ளல் – திருவரங்கம் பெரியகோயில்)

அனைத்துலகும் வாழப் பிறந்த எம்பெருமானார் விஷயமாக
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# ஆர்த்திப் பிரபந்தம்

(இதற்கான மூலம் மற்றும் பொருள் – தமிழில்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

## தனியன்கள்

1. தேன் பயிலும் தாரான் எதிராசன் சேவடி மேல்
தான் பரமபத்தி தலை எடுத்து – மாந்தர்க்கு
உணவாக ஆர்த்தியுடன் ஒண் தமிழ்கள் செய்தான்
மணவாள மாமுனிவன் வந்து.

**பொருள்** – மகரந்தம் வழிந்தோடும் மலர்மாலையை அணிந்துள்ள எம்பெருமானாரின் அழகான திருவடிகள் மீது ஸ்வாமி மணவாளமாமுனிகளுக்கு பரமபக்தி தழைத்து ஓங்கியது. அறிவற்ற மக்களுக்கு ஞானம் ஏற்படும் பொருட்டு, மிகவும் உருக்கத்துடன் கூடிய இந்த ப்ரபந்தத்தை ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தார்.

2. வம்பவிழ் தார் மணவாள மாமுனிவன்
அம்புவியில் கால் பொருந்தா ஆர்த்தியினால் – உம்பர் தொழும்
விண்ணுலகில் செல்ல விரைந்து எதிராசன் பதங்கள்
நண்ணி உரைத்தான் நமக்கே.

**பொருள்** - அப்போது மலர்ந்த மாலைகள் கொண்ட ஸ்வாமி மணவாளமாமுனிகளுக்கு, அழகான இந்தப் பூமியில் இருக்கத் திருவடிகள் பொருந்தாமல், துக்கத்துடன் இருந்தன. மிகவும் விரைவாக தேவர்களால் வணங்கப்படும் பரமபதம் சென்றடையும் பொருட்டு, எம்பெருமானாரின் திருவடிகளைப் போற்றியபடி இதனை நமக்காக அருளிச்செய்தார்.

## ஆர்த்திப் பிரபந்தம்

1 வாழி எதிராசன் வாழி எதிராசன்
வாழி எதிராசன் என வாழ்த்துவார் – வாழி என
வாழ்த்துவார் வாழி என வாழ்த்துவார் தாளிணையில்
தாழ்த்துவார் விண்ணோர்தலை.

**பொருள்** – “எம்பெருமானார் பல்லாண்டு வாழ்க”, “எம்பெருமானார் பல்லாண்டு வாழ்க”, “எம்பெருமானார் பல்லாண்டு வாழ்க” என்று வாழ்த்துபவர்கள்; இவ்விதமாக எம்பெருமானாரை வாழ்த்துபவர்களை வாழ்த்துபவர்கள்; இவ்விதமாக வாழ்த்துபவர்களை வாழ்த்துபவர்களின் திருவடிகளில் பணிபவர்கள் நித்யஸூரிகளுக்கும் மேலானவர்கள் ஆவர். அவர்கள் திருவடிகளில் தேவர்களும் பணிவார்கள்.

2. இராமானுசாய நம என்று சிந்தித்(து)
இரா மனுசரோடு இறைப்போழ்(து) – இராமாறு
சிந்திப்பார் தாளிணையில் சேர்ந்திருப்பார் தாளிணையை
வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு.

**பொருள்** – எப்போதும் “இராமாநுசாய நம:” என்று கூறியபடி இருப்பது மிகவும் உயர்ந்த செயலாகும். ஆயினும் இதனை ஒரு சிலர் செய்யாமல் இருக்கக்கூடும். இப்படிப்பட்ட மனிதர்களுடன் சேராமல், ஒரு நொடிப்பொழுதும் அவர்களுடன் கூடாமல் உள்ள மனிதர்களின் திருவடித் தாமரைகள் மிகவும் உயர்ந்தவை ஆகும். இவர்களின் திருவடிகளைப் போற்றுபவர்கள் நித்யஸூரிகளுக்குச் சமமாக இருப்பிடம் பெறுவார்கள்.

3. தந்தை நற்றாய் தாரம் தனயர் பெருஞ்செல்வம்
என்றனக்கு நீயே எதிராசா! இந்த நிலைக்(கு)
ஏராத இவ்வுடலை இன்றே அறுத்தருள
பாராதது என்னோ பகர்?

**பொருள்** – எம்பெருமானாரே! எனது தந்தை, அன்புடைய தாய், மனைவி, புத்திரர்கள், உயர்ந்த செல்வம் ஆகிய அனைத்தும் நீயாகவே உள்ளாய். ஆனால் இப்படிப்பட்ட சிந்தனையில் தொடர்ந்து ஈடுபட இந்த உடல் தடையாக, அந்தச் சிந்தனையில் பொருந்தாமல் உள்ளது. இப்படிப்பட்ட இந்த உடலை நீக்காமல், எனக்குக் கருணை காட்டாமல் இருப்பதற்கு, என்னைக் காணாமல் உள்ளதற்கு என்ன காரணம் என்று கூறவேண்டும்.

4. இந்த உடல் சிறைவிட்டு எப்பொழுது யான் ஏகி
அந்தமில் பேரின்பத்துள் ஆகுவேன் – அந்தோ
இரங்காய் எதிராசா! என்னை இனி உய்க்கை
பரங்காண் உனக்கு உணர்ந்து பார்.

**பொருள்** – இந்த உடல் என்பது கொடுமையான சிறை போன்று உள்ளது. இதனை விடுத்து, எல்லையில்லாத இன்பம் அளிக்கவல்ல பரமபதத்திற்கு, அர்ச்சிராதி மார்க்கமாக நான் எப்போது செல்வேன்? யதிகளின் தலைவரான எம்பெருமானாரே! என் மீது கருணை கொள்ளவேண்டும். என்னைக் காப்பது என்ற பாரம் உமக்கு உள்ளது என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். கீதையில் கண்ணனும் – க்ஷிபாமி – என்று கைவிட்ட என்னைப் போன்றவர்களை கரை ஏற்றுதல் என்பது, பல்லுயிர்க்கும் வீடு அளிப்பானாய் அவதரித்த உனக்கே பொறுப்பு அல்லவா?

5. தன் புதல்வன் கூடாமல் தான் புசிக்கும் போகத்தால்
இன்புறுமோ? தந்தை எதிராசா! – உன் புதல்வன்
அன்றோ யான் உரையாய் ஆதலால் உன் போகம்
நன்றோ எனை ஒழிந்த நாள்?

**பொருள்** – தனது மகனுக்கு ஏதும் இல்லாதபோது, பலவிதமான ஐச்வர்யங்களை அனுபவிப்பதன் மூலம் ஒரு தந்தைக்கு இன்பம் ஏற்படுமோ? எம்பெருமானாரே! நான் உமது புத்திரன் அல்லவோ? இப்படி உள்ளபோது என்னை விடுத்து நீ மட்டுமே பரமபதம் என்ற இன்பத்தை அனுபவித்தபடி உள்ளது நன்றாக உள்ளதா? நீயே உரைப்பாய்.

6. வேம்பு முற்றக் கைப்புமிகுவது போல் வெவ்வினையேன்
தீம்பு முற்றும் தேகமுற்றிச் செல்லுங்கால் – ஆம்பரிசால்
ஏற்கவே சிந்தித்து எதிராசா! இவ்வுடலைத்
தீர்க்கவேயான வழி செய்.

**பொருள்** – வேப்பமரமானது நாள்கள் செல்லச் செல்ல கசப்புத் தன்மையையே அதிகப்படுத்திக் கொள்ளும். இது போன்று தீயவினைகள் சூழ்ந்துள்ள எனது உடல் வளரவளர, மேலும் தீயகர்மங்களே செய்தபடி உள்ளேன். எனது ஸ்வரூபத்தை நீ ஆராய்ந்து பார்க்க வேண்டும். எம்பெருமானாரே! இந்த உடல் தொடர்பு நீங்குவதற்கான வழியை நீயே ஏற்படுத்தவேண்டும்.

7. அன்னை குடிநீர் அருந்தி முலையுண் குழவி
தன்னுடைய நோயைத் தவிராளோ? – என்னே!
எனக்கா எதிராசா! எல்லா நீ செய்தால்
உனக்கு அது தாழ்வோ உரை.

**பொருள்** – தனது குழந்தைக்கு ஏதேனும் நோய் வந்து விட்டால் அதன் தாய், “இது நம்மால் அல்லவா வந்தது?”, என்று எண்ணி பலவிதமான மருந்துகளை உட்கொண்டு, அதன் மூலம் தாய்ப்பால் பருகும் குழந்தையின் நோயைத் தீர்ப்பாள் அல்லவா? யதிகளின் தலைவரான நீ, எனது தாயைக் காட்டிலும் மேலானவர் அல்லவா? என்னைக் காப்பாற்றும் செயல்கள் அனைத்தும், எனது தாய் போன்று நீ செய்வதால் உமக்கு என்ன தாழ்வு ஏற்படப் போகிறது? இதனை விளக்கவேண்டும்.

8. தன்குழவி வான் கிணற்றைச் சார்ந்திருக்கக் கண்டிருந்தாள்
என்பதன்றோ அன்னை பழியேற்கின்றாள் – நன்கு உணரில்
என்னாலே என் நாசம் மேலும் எதிராசா!
உன்னாலே ஆம் உறவை ஓர்.

**பொருள்** – (ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தையின் உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால், மரணம் ஏற்பட்டால் , அதற்கு அந்தக் குழந்தையின் தாயே பொறுப்பு என்று சாஸ்திரம் கூறுகிறது). ஒரு குழந்தை தனக்கு ஆபத்து உள்ளது என்பதை அறியாமல் ஆழமாகவும், அகன்றும் உள்ள கிணற்றின் அருகில் செல்கிறது என்று வைத்துக் கொள்வோம். இதனைப் பார்த்துக் கொண்டு ஒரு தாய் ஏதும் செய்யாமல் இருப்பாள் என்றால், சாஸ்திரத்தில் கூறும் அபவாதத்தை அல்லவோ பெற்று விடுவாள்? எனது கர்மம் என்னும் பாவங்கள் காரணமாகவே நான் துன்பம் கொண்டபோதிலும், எனக்கும் உனக்கும் உள்ள உறவு முறையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். எனது தாய் ஸ்தானத்தில் அல்லவா நீ உள்ளாய்?

**குறிப்பு** – இங்கு மாமுனிகளின் சாதுர்யத்தைக் காணவேண்டும். குழந்தையின் விபத்துக்கு அதன் தாய் காரணம் போன்று, தனது பாவங்களுக்கு தாய் போன்ற எம்பெருமானாரே காரணம் என்று கூறவில்லை. மாறாக, தன்னுடைய கர்மங்களே காரணம் என்று கூறுவது காண்க.

9. கூபத்தில் வீழும் குழவியுடன் குதித்து அவ்
வாபத்தை நீக்கும் அந்த அன்னைபோல் - பாபத்தால்
யான் பிறப்பேனேலும் இனி எந்தை எதிராசன்
தான் பிறக்கும் என்னை உய்ப்பதா.

**பொருள்** – கிணற்றில் விழுந்த தனது குழந்தையைக் காப்பாற்ற எண்ணும் தாய், அந்த துன்பத்தில் இருந்து குழந்தையைக் காப்பாற்ற தானும் கிணற்றில் குதிக்கிறாள். அந்தக் குழந்தை போன்று நானும் பாவங்கள் என்ற இந்த ஸம்ஸாரத்தில் விழுந்து, மேலும் பல பிறவிகள் எடுக்கும்படி உள்ளேன். கிணற்றில் விழும் தாய் போன்று, எனது தந்தையான எம்பெருமானார் என்னைக் காக்கும் பொருட்டு இந்த உலகில் அவதரித்தார்.

10. பூமகள்கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த்
தாம் மகிழும் செல்வச் சடகோபர் - தேமலர்த்தாட்கே
ஏய்ந்து இனிய பாதுகமாம் எந்தை இராமானுசனை
வாய்ந்து எனது நெஞ்சமே! வாழ.

**பொருள்** – தாமரை மலரின் இனிமை என்பதே ஒரு வடிவு கொண்டாற்போல் உள்ள ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனாக உள்ள பெரியபெருமாளின் திருவடிகளுக்குப் பாதுகைகளாக நம்மாழ்வார் உள்ளார். இப்படியாக உள்ளதை நம்மாழ்வார் பெரும்பேறு என்று கருதி, அவ்விதம் இருந்து, ஆனந்தம் கொள்கிறார். இத்தகைய நம்மாழ்வாரின் மகரந்தம் பொருந்திய அழகான மலர் போன்ற திருவடிகளின் நிலைகளாக எனது தந்தையான எம்பெருமானார் உள்ளார். இப்படிப்பட்ட எம்பெருமானாருடன் தொடர்பு ஏற்படுத்தியபடி, எனது நெஞ்சமே! நீ வாழ்வாயாக (இராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னி வாழ நெஞ்சே என்னும்படி இருத்தல் வேண்டும்).

11. உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா
மன்னு புகழ்சேர் வடுகநம்பி - தன்னிலையை
என் தனக்கு நீ தந்து எதிராசா எந்நாளும்
உன் தனக்கே ஆட்கொள் உகந்து.

**பொருள்** – எம்பெருமானாரே! உம்மை அல்லாது மற்றொரு பரதேவதையை அறியாமல் இருந்த காரணத்தினால், ஸ்திரமான புகழை வடுகநம்பி அடைந்தார் அல்லவா? அப்படிப்பட்ட பக்தி நிஷ்டையை நீ எனக்கும் அருள வேண்டும். எப்போதும் நான் உமக்கே அடிமையாக இருக்கும் நிலையை நீயே அருளவேண்டும்.

12. தேசம் திகழும் திருவாய்மொழிப்பிள்ளை
மாசு இல் திருமலையாழ்வார் என்னை – நேசத்தால்
எப்படியே எண்ணி நின்பால் சேர்த்தார் எதிராசா
அப்படியே நீ செய்தருள்.

**பொருள்** – எந்தவிதமான தோஷங்களும் இல்லாதவரும், திருமலையாழ்வார் என்று கூறப்படுபவரும், அனைத்து இடங்களிலும் தனது புகழ் பரவும்படி நின்றவரும் ஆகிய திருவாய்மொழிப்பிள்ளை என்ற எனது ஆசார்யன், என்னை உம்மிடம் சேர்த்தார். என் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்த அவர், "என்ன செய்தால் இவன் பிழைப்பான்", என்று

ஆராய்ந்து உம்மிடம் சேர்த்தார். எம்பெருமானாரே! நீயும் அதனை மனதில் கொண்டு எனக்கு அருளவேண்டும்.

13. எதிராசன் வாழி எதிராசன் வாழி
எதிராசன் வாழி என்று ஏத்திச் சதிராக
வாழ்வார்கள் தாள் இணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவார்
ஆழ்வார்கள் தங்கள் அருள்.

**பொருள்** - “எம்பெருமானாருக்குப் பல்லாண்டு, எம்பெருமானாருக்குப் பல்லாண்டு, எம்பெருமானாருக்குப் பல்லாண்டு”, என்று பலமுறை கூறியபடி மிகவும் சாமர்த்தியமாக வாழ்பவர்கள் உள்ளனர். இப்படிப்பட்டவர்களின் திருவடிகளை அண்டியபடியே சிலர் வாழக்கூடும். இவ்விதம் வாழ்பவர்கள் ஆழ்வார்களின் அருளைப் பெற்றுவிடுவார்கள்.

14. அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ
அதிகாரம் இல்லாதார்க்கு அன்றோ – எதிராசா
நீ இரங்க வேண்டுவது நீயும் அதிகாரிகளுக்கே
இரங்கில் என் செய்வோம் யாம்.

**பொருள்** – கர்மம், ஞானம், பக்தி போன்றவற்றைக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டுமே திருவரங்கன் இரக்கம் கொண்டு அருள் செய்கிறான். எம்பெருமானாரே! நீ இவ்விதம் தகுதி இல்லாதவர்களுக்கும் இரங்குபவர் ஆயிற்றே! ஆனால் திருவரங்கன் போன்று, நீயும் தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே இரக்கம் காட்டுவது என்று முடிவு செய்துவிட்டால், நாங்கள் எங்கு செல்வோம், என்ன செய்வோம்?

15. எம்பெருமானார் திருவடிகளே சரணம்
என்பதுவே நாவுரைக்கும் இத்தாலென்? – அன்பவர்பால்
இப்போதளவும் யான் ஒன்றும் காண்கின்றிலேன்
எப்போது உண்டாவது இனி?

**பொருள்** – எனது நாக்கு எப்போதும், “எம்பெருமானார் திருவடிகளே சரணம்”, என்று கூறியபடி உள்ளது. ஆனால் இதனால் என்ன பயன்? எம்பெருமானார் மீது பக்தியும் ப்ரேமையும் இதுவரை உண்டாகவில்லை, இப்போதும் உண்டாகவில்லை. இனி எப்போது உண்டாகுமோ? அவ்விதம் ப்ரேமை உண்டாகும்வரை அவர் திருவடிகளைப் போற்றியபடி இருந்து மட்டுமே என்ன பயன்?

16. ஆகாதது ஈதென்று அறிந்தும் பிறர்க்கு உரைத்தும்
ஆகாததே செய்வன் ஆதலால் – மோகாந்தன்
என்று நினைத்து என்னை இகழேல் எதிராசா
என்று உன்னடி சேர்வன் யான்.

**பொருள்** – “இவை சாஸ்திரங்களால் தள்ளப்பட்டவை, ஆகையால் இவற்றைச் செய்யக்கூடாது”, என்று மற்றவர்களுக்கு நான் உபதேசம் செய்தபடி உள்ளேன். ஆனால் நானே அந்தச் செயல்கள் அனைத்தையும் செய்தபடி உள்ளேன். இதனைக் கண்டு, ”இவன் மோகம் காரணமாக இவ்விதம் செய்கிறான்”, என்று என்னை வெறுத்து ஒதுக்கி விடாதீர்கள். எம்பெருமானாரே! நான் எப்போது உனது திருவடிகளை அடைவேன் என்று கூறவேண்டும்.

17. பொல்லாங்கு அனைத்தும் பொதிந்து கொண்டு நன்மையில் ஒன்று
இல்லா எனக்கும் எதிராசா - நல்லார்கள்
நண்ணும் திருநாட்டை நான் தருவேன் என்ற நீ
தண்ணென்றிருக்கிறது எந்தான்?

**பொருள்** – அனைத்து தீமையான செயல்களையும் தகட்டில் பதிப்பது போன்று பதித்துக்கொண்டும், சிறிதும் நன்மை என்பதே இல்லாதபடியும் நான் உள்ளேன். ஆயினும் எம்பெருமானாரே! நீ என்னிடம், “உயர்ந்த மனிதர்கள் அடையக்கூடிய பரமபதத்தை அளிப்பேன்”, என்று கூறினாய் அல்லவா? அதன் பின்னரும் தாமதித்துக் கொண்டு இருப்பது என்ன காரணத்தினால் என்று கூறுவாயாக.

18. என்று விடிவது எனக்கு எந்தாய் எதிராசா!
ஒன்றும் அறிகின்றிலேன் உரையாய் - குன்றாமல்
இப்படியே இந்த உயிர்க்கு என்றும் இருளே விளைக்கும்
இப்பவமாம் நீண்ட இரவு.

**பொருள்** – எனது தந்தையாகிய எம்பெருமானாரே! என்றும் மாறாமல் உள்ள இந்த ஆத்மாவானது, அதற்கு அஜ்ஞானம் ஏற்படுத்துகின்ற இருள் என்ற ஸம்ஸாரத்தில் நீண்ட காலம் துன்பப்பட்டபடி உள்ளது. எப்போது எம்பெருமானார் என்ற சூரியன் மூலம் இந்த இரவுப் பொழுது நீங்கும்? இதனைப் பற்றி எனக்கு விளங்கவே இல்லை. எம்பெருமானாரே! நீயே உரைக்கவேண்டும்.

19. அல்லும் பகலும் யான் ஆக்கை வழி உழன்று
செல்லுமது உன் தேசுக்குத் தீங்கு அன்றோ – நல்லோர்கள்
தம் தனயர் நீசர்க்கு ஆட்செய்யச் சகிப்பரோ
எந்தை எதிராசா இசை.

**பொருள்** – இரவும் பகலும் நான் இந்த உடலின் இழுப்பு அனைத்திற்கும் இணங்க, அதன் வழியே சென்று விடுகிறேன். இவ்விதம் நான் உள்ள நிலையானது, உனது புகழுக்குக் களங்கம் அல்லவோ? எப்படி என்றால் – சிறந்த மனிதர்கள் தங்களின் புத்திரர்கள் தகாத செயலுக்குத் துணை போவதை ஏற்பார்களா? எனது தந்தையாகிய எம்பெருமானாரே! நீயே இதற்கு விடை தர வேண்டும்.

20. போம்வழியைத் தரும் என்னும் இன்பம் எல்லாம்
புசித்து வழிபோய் அமுத விரசை ஆற்றில்
நாம் மூழ்கி மலமற்றுத் தெளிவிசும்பை
நண்ணி நலந்திகழ்மேனி தன்னை பெற்றுத்
தாம் அமரர் வந்து எதிர் கொண்டு அலங்கரித்துச்
சற்கரிப்ப மாமணி மண்டபத்துச் சென்று
மாமலராள் கோன் மடியில் வைத்து உகக்கும்
வாழ்வு நமக்கு எதிராசன் அருளும் வாழ்வே.

**பொருள்** – நாம் இறந்த பின்னர் நமது ஆத்மாவானது பரமபதத்தை அடையும் சிறந்த வழியான அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்லுகிறது. அந்த வழியில் உள்ள இன்பம் முழுவதையும் அனுபவிக்கிறது. அமிர்தம் நிறைந்த விரஜா நதியில் நீராடி மகிழ்கிறது. ஸம்ஸார துன்பம் அனைத்தும் நீங்கியபடி, அனைத்து மாசுகளும் கழித்து விடுகிறது. அதன் பின்னர் பரமபதத்தை அடைந்து, தனது இயல்பான ஸ்வரூபம், ரூபம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக பிரகாசத்துடன் கூடிய ஸத்வ உடலை (அப்ராக்ருத) எடுத்துக் கொள்கிறது. அதன் பின்னர் நித்யஸூரிகளால் வரவேற்கப்பட்டபடிச் செல்கிறது. நன்கு அலங்கரிக்கப்பட்ட திருமாமணி மண்டபத்தில் வீற்றுள்ளவனும், தாமரை மலரில் அவதரித்த மஹாலக்ஷ்மியின் நாயகனும் ஆகிய ஸ்ரீவைகுண்டநாதனை அடைகிறது. அவன் அந்த ஆத்மாவை எடுத்து, தனது மடியில் வைத்து, உச்சி முகர்ந்து ஆனந்தம் அடையச் செய்கிறான். இப்படிப்பட்ட உயர்ந்த பேறு என்பது, நமக்கு எம்பெருமானார் ஒருவரால் மட்டுமே அளிக்கக் கூடியதாகும்.

21. திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
தரும் மதி கொண்டவர் தம்மை உத்தாரகராக எண்ணி
இரு மனமே! அவர்க்காய் எதிராசர் எமை கடுக
பரமபதம்தனில் ஏற்றுவர் என்ன பயம் நமக்கே.

**பொருள்** – எனது மனமே! ஸ்ரீசைலேசர் என்று புகழப்படும் திருவாய்மொழிப்பிள்ளை தமது கருணை காரணமாக நமக்கு அளித்த ஞானத்தை எப்போதும் நிலை நிறுத்தியபடி, அவரையே ஸம்ஸாரத்தில் இருந்து நம்மைக் காப்பவராக எண்ணியபடி இருப்பாயாக! இதனால் விளையும் பயன் என்ன தெரியுமா? தன்னைச் சீர்படுத்திய அந்த ஆசார்யனின் தொடர்பு நமக்கு உள்ளது என்று எம்பெருமானார் கண்டு கொள்வார். நம்மைச் சிறிதும் தாமதம் செய்யாமல் விரைவாகப் பரமபதத்திற்கு அனுப்பி வைப்பார். பின்னர் ஏன் அச்சம் கொள்ளவேண்டும்?

22. தீதற்ற ஞானத் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
ஏதத்தை மாற்றும் எதிராசர் தன் அபிமானமென்னும்
போதத்தை ஏறிப் பவமாம் புணரிதனைக் கடந்து
கோதற்ற மாதவன் பாதக்கரையைக் குறுகுவனே.

**பொருள்** – எந்தவிதமான தோஷமும் இல்லாதவரும், சிறந்த ஞானம் உள்ளவரும் ஆகிய திருவாய்மொழிப்பிள்ளையின் கருணை காரணமாக எனக்குக் கிட்டியது என்ன? நமது தோஷங்கள் அனைத்தையும் நீக்கவல்ல எம்பெருமானாரின் அபிமானம் என்பதே எனக்குக் கிட்டியது. எம்பெருமானார் என்னும் அந்தப் படகில் ஏறியபடி நான் ஸம்ஸாரம் என்ற கடலைக் கடந்து, தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ள ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகள் என்ற கரையை அடைந்துவிடுவேன்.

23. அடியார்கள் குழாங்கள் அழகோலக்கமிருக்க
ஆநந்தமயமான மாமணி மண்டபத்துப்
படியாதுமில் படுக்கையாய் இருக்கும் அநந்தன்
பணாமணிகள் தம்மின் ஒளி மண்டலத்தின் இடையில்
வடிவாரும் மாமலராள் வலவருகு மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகும் இருக்க
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கடுக
நான் அனுபவிக்கும் வகை நல்கு என் எதிராசா.

**பொருள்** – எனக்கு ஸ்வாமியாக உள்ள எம்பெருமானாரே! ஆதிசேஷன், கருடன் விஷ்வக்சேனர், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார் போன்ற பலரும் மணிகள், முத்துக்கள்

என்று தோன்றுவது போல் வரிசையாக நின்று வணங்கியபடி உள்ளனர். அங்குள்ள திருமாமணி மண்டபத்தில், ஆதிசேஷன் என்ற படுக்கை மீது, அவனது படங்களில் உள்ள இரத்தினக் கற்கள் ஜொலிக்க எம்பெருமான் சயனித்துள்ளான். அவனது வலது பக்கத்தில், அவனை எப்போதும் பிரியாத பெரியபிராட்டியும், இடது பக்கத்தில் பூமாதேவியும் நீளாதேவியும் பொருந்தியுள்ளனர். இப்படிப்பட்ட மூன்று கொடிகளின் நடுவில் மலர்ந்துள்ள தாமரை போன்று ஏழு உலகங்களும் ஆட்சி செய்தபடி உள்ள ஸ்ரீவைகுண்ட நாதனை நான் விரைந்து சென்று வணங்கும்படி நீயே அருளவேண்டும்.

24. இந்த உடல் விட்டு இரவி மண்டலத்தூடேகி
இவ்வண்டம் கழித்து இடையில் ஆவரணமேழ்போய்
அந்தமில் பாழ்கடந்து அழகார் விராசைதனில் குளித்து அங்கு
அமானவனால் ஒளி கொண்ட சோதியும் பெற்று அமரர்
வந்து எதிர்கொண்டு அலங்கரித்து வாழ்த்தி வழிநடத்த
வைகுந்தம் புக்கு மணிமண்டபத்துச் சென்று
நம் திருமாலடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாள் எனக்குக் குறுகும்வகை நல்கு என் எதிராசா.

**பொருள்** – எனது நாதனான எம்பெருமானாரே! இந்த உடலை விட்டு எனது ஆத்மா சூர்யமண்டலத்தை அடைந்து, அதனையும் கடந்து இந்த ப்ரம்மாண்டத்தைத் தாண்டிச் செல்கிறது. அதன் பின்னர் உள்ள ஏழு ஆவரணங்களையும் கடந்து செல்கிறது. எல்லையற்ற ப்ரக்ருதியைக் கடந்து, மிகவும் அழகாக உள்ள வ்ரஜா நதியை அடைகிறது. இங்கு நீராடிய பின், மிகவும் சிறந்த ஒளி வீசும் உடலை, அமானவன் அளித்து விடுகிறான். பின்னர் இப்படிப்பட்ட உடலுடன் கூடிய ஆத்மாவை, நித்யஸூரிகள் எதிர்கொண்டு அழைத்து, பலவிதமான அலங்காரங்கள் செய்து, வாழ்த்தி, திருமாமணி மண்டபத்திற்கு வழி நடத்துகின்றனர். இப்படியாக ஸ்ரீவைகுண்டம் அடைந்து, திருமாமணி மண்டபம் புகுந்து, நமது ஸ்வாமியாக உள்ள ஸ்ரீமந்நாராயணனின் அடியார்களுடன் இணைந்து, அவனை வாழ்த்தி நின்றபடி உள்ள நாள், எனக்கு வெகு விரைவாகக் கிட்டும்படி நீயே அருள் புரியவேண்டும்.

25. என்று நிரேதுமாக என்னை அபிமானித்து
யானும் அதறிந்து உனக்கேயாயிருக்கும் வகை செய்தாய்
அன்று முதல் இன்றளவும் அநவரதம் பிழையே
அடுத்து அடுத்துச் செய்வது அனுதவிப்பது இனிச்செய்யேன்
என்று உன்னை வந்து இரப்பதாம் என் கொடுமை கண்டும்
இகழாதே இரவுபகல் அடிமை கொண்டு போந்தாய்
இன்று திருநாடும் எனக்கு அருள எண்ணுகின்றாய்
இனிக் கடுகச் செய்தருளவேண்டும் எதிராசா.

**பொருள்** – யதிகளின் தலைவரான எம்பெருமானாரே! நீ எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், என்னை உம்மைச் சேர்ந்தவன் என்று அருள்புரிந்தாய். இதன் மூலம் நான் உனக்கே அடிமையாக இருக்கும்படிச் செய்தாய். ஆயினும், அன்று முதல் இன்று வரை நான் தொடர்ச்சியாகப் பல பிழைகளைச் செய்தபடி உள்ளேன். அதன் பின்னர், ”ஏன் இவ்விதம் பிழை செய்தோம்”, என்று வருந்தி நிற்கிறேன். மேலும் உம்மிடம் வந்து, ”இனி நான் இவ்விதம் பிழைகள் செய்யமாட்டேன்”, என்று கூறியபடியும் உள்ளேன். எனது இத்தனைக் கொடிய நிலை கண்டும் நீ, இரவுபகல் என்று பாராமல், என்னை ஏற்றுக்கொண்டு, உனது திருவடிகளில் தொடர்ந்து தொண்டு புரியும்படிச் செய்கிறாய். இது மட்டும் அல்லாமல், எனக்கு மிகவும் விரைவாகப் பரமபதம் அளிக்கவேண்டும் என்றும் எண்ணியபடி உள்ளாய். அதன் பின்னர் ஏன் தாமதம்? விரைந்து அளிப்பாயாக.

26. தென் அரங்கர் தமக்காமோ? தேவியர்கட்காமோ?
சேனையர்கோன் முதலான சூரியட்கர்காமோ?
மன்னிய சீர் மாறன் அருள்மாரி தமக்காமோ ?
மற்றும் உள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ?
என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முடியும்?
எதிராசா உனக்கு அன்றி யான் ஒருவர்க்கு ஆகேன்
உன் அருளால் எனக்கு ருசி தன்னையும் உண்டாக்கி
ஒளி விசும்பில் அடியேனை ஒருப்படுத்து விரைந்தே.

**பொருள்** – எம்பெருமானாரே! நான் செய்த பலவிதமான பிழைகளை பெரியபெருமாளான திருவரங்கன் பொறுத்துக் கொள்வானா? ஸ்ரீரங்கநாச்சியார் தொடக்கமாக உள்ள பிராட்டிமார்கள் பொறுத்துக் கொள்வார்களா? சேனைமுதலியார் தொடக்கமாக உள்ள நித்யஸூரிகள் பொறுத்துக் கொள்வார்களா? என்றும் உயர்ந்த குணங்கள் பொருந்திய நம்மாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் பொறுத்துக் கொள்வார்களா? மற்றும் நாதமுனிகள் தொடக்கமாக உள்ள ஆசார்யர்கள் பொறுத்துக் கொள்வார்களா? இவ்விதம் எனது பிழைகளை யாரால்தான் பொறுத்துக் கொள்ள இயலும்? எம்பெருமானாரே! இனி உன்னை அல்லாமல் வேறு யாரிடமும் செல்லமாட்டேன். உனது கருணை மூலம் எனக்கு உன்னிடம் கைங்கர்ய ருசி ஏற்படுத்தி, ஒளி வீசும் பரமபதத்திற்கு விரைவாகச் சேர்த்தருள வேண்டும்.

27. இவ்வுலகினில் இனி ஒன்றும் எண்ணாதே நெஞ்சே
இரவுபகல் எதிராசர் எமக்கு இனிமேல் அருளும்
அவ்வுலகை அலர்மகள்கோன் அங்கிருக்கும் இருப்பை
அடியார் குழாங்கள் தமை அவர்கள் அனுபவத்தை
இவ்வுயிரும் அதுக்கு இட்டுப் பிறந்து இழந்து கிடந்தது
என்னும் அத்தை என்றும் அதுக்கு இடைச்சுவராய் கிடக்கும்
வெவ்வினையால் வந்த உடல் விடும் பொழுதை விட்டால்
விளையும் இன்பம் தன்னை முற்றும் விடாமல் இருந்து எண்ணே.

**பொருள்** – எனது நெஞ்சமே! இந்த உலகில் உள்ள எதனையும் பற்றி இனி நீ எண்ணாமல் இருப்பாயாக. இரவுபகல் போன்ற அனைத்துக் காலங்களிலும் எம்பெருமானார் நமக்குத் தர உள்ள பரமபதத்தை மட்டுமே சிந்தித்தபடி இருப்பாயாக. அங்கு தாமரை மலரில் அவதரித்த மஹாலக்ஷ்மியுடன் கூடிய ஸ்ரீமந்நாராயணன் தனது சிம்மாசனத்தில் வீற்றுள்ள தன்மை, அவனைச் சுற்றி நின்று நித்யஸூரிகள் அனுபவிக்கும் இன்பம் ஆகியவற்றை மட்டுமே எண்ணுவாயாக. இத்தகைய இன்பத்தை அடையும் தகுதி இருந்தாலும், அதனை இழந்து, இந்த உடலில் சிறைப்பட்டதை எண்ணுவாயாக. கர்ம பயன் காரணமாக ஏற்பட்ட இந்த உடல் தொடர்பைக் கைவிடும்போது, இவ்விதம் கிட்டுகின்ற முழுமையான இன்பத்தை எண்ணியபடியே இருப்பாயாக.

28. பண்டு பலவாரியரும் பார் உலகோர் உய்யப்
பரிவுடன் செய்தருளும் பல்கலைகள் தம்மை
கண்டதெல்லாம் எழுதி அவை கற்றிருந்தும் பிறர்க்கும்
காதலுடன் கற்பித்தும் காலத்தைக் கழித்தேன்
புண்டரீகை கேள்வன் உறை பொன்னுலகு தன்னில்
போக நினைவு ஒன்றும் இன்றிப் பொருந்தி இங்கே இருந்தேன்
எண்டிசையும் ஏத்தும் எதிராசன் அருளாலே
எழில் விசும்பை அன்றி இப்போது என் மனம் எண்ணாதே.

**பொருள்** - இதற்கு முன்பு இருந்த காலகட்டங்களில் வாழ்ந்து வந்த பூர்வாசார்யகள் அனைவரும், இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களும் உய்யும்விதமாக, அவற்றின் மீது கொண்ட பரிவு காரணமாக, பல உயர்ந்த பிரபந்தங்களை அருளிச்செய்தனர். இவ்விதம் என் கண்ணில்பட்ட அவை அனைத்தையும் ஆராய்ந்து, அவற்றுக்கு உரை எழுதி, தெளிவாகக் கற்று, மற்றவர்களுக்கு அவற்றை மிகவும் அன்புடன் போதித்தபடி எனது காலத்தை இதுவரை கழித்து வந்தேன். தாமரைமலரில் வாசம் செய்யும் பெரியபிராட்டியின் நாயகனான ஸ்ரீமந்நாராயணன் என்றும் நித்யவாசம் செய்யும் இடமாகிய பரமபதத்தை அடையவேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், இந்த

உலகின் மீது ஆசை கொண்டு இருந்து வந்தேன். அனைத்துத் திசைகளிலும் உள்ளவர்கள் போற்றும் புகழ் உடைய எம்பெருமானார் எனக்குச் செய்த அருள் காரணமாக, இன்று பரமபதம் மீது மட்டுமே எனது மனதில் ஆவல் உள்ளது, வேறு எதனையும் எண்ணவில்லை.

29. சாறுவாக மதநீறு செய்து சமணச்செடிக்கனல் கொளுத்திய
சாக்கியக் கடலை வற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறித்திட
மாறு செய்திடு கணாதவாதியர்கள் வாய் தகர்த்து அறமிகுத்து மேல்
வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாது செய்த எதிராசனார்
கூறும் மா குருமதத்தோடு குமாரிலன் மதம் அவற்றின் மேல்
கொடிய தர்க்க சரம் விட்டபின் குறுகிய மாயவாதியரை வென்றிட
மீறி வாதில் வரும் பார்க்கரன் மதவிலக்கடிக் கொடியெறிந்து போய்
மிக்க யாதவ மதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியே.

**பொருள்** - "ப்ரத்யக்ஷமாகக் காண்பது மட்டுமே மெய்" என்று கூறிய சார்வாக மதத்தை தனது ஸ்ரீபாஷ்யம் போன்ற க்ரந்தங்கள் மூலம் பஸ்மம் ஆக்கினார். சமணர்கள் என்ற செடியை அடியுடன் கொளுத்தினார். சாக்கியர்கள் என்ற பெரும் கடலை வற்றும்படிச் செய்தார். மிகவும் உயரமாக உள்ள சாங்கிய மதம் என்னும் மலையை, வஜ்ராயுதம் கொண்டு தாக்குவது போல் அழித்தார். தொடர்ந்து வாதம் செய்தபடி இருந்த காணாதர்களின் வாதம் அனைத்தையும் தனது வாதம் மூலம் தகர்த்தார். இவ்விதம் மேன்மேலும் வந்த பலரையும் பாணாசுர யுத்தத்தில் ருத்ரன் தனது பரிவாரங்களுடன் ஓடியது போன்று, தனது வாதம் மூலம் வென்று, அவர்களை ஓடச்செய்தார். மேலும் தவறான வாதங்களுடன் கூடிய பிரபாகர மதத்தை விட உயர்ந்த குமாரிலபட்டரின் மதத்தின் மீது தனது வாதம் என்ற பாணங்கள் விட்டு அழித்தார். அதன் பின்னர் மாயாவாதிகளை வென்றார். மிகவும் கர்வம் கொண்டபடி இருந்த பாஸ்கர மதத்தை வேருடன் அழித்தார். அதனையும் தொடர்ந்து நின்ற யாதவப்ரகாசரின் மதத்தையும் மாய்த்தார். இவ்விதம் பல பராக்ரமங்கள் கொண்ட எம்பெருமானார் என்றும் வாழ வேண்டும்.

30. சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் செய்யவடிவு எப்பொழுதும் வாழி
இலங்கிய முந்நூல் வாழி இணைத்தோள்கள் வாழி
சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல் வாழி துணை மலர்க்கண்கள் வாழி
ஈராறு திருநாமம் அணிந்த எழில் வாழி
இனி திருப்போடு எழில் ஞானமுத்திரை வாழியே.

**பொருள்** - சிறந்த திருக்கல்யாண குணங்களால் பரிபூர்ணமாக உள்ளதும், நமக்குச் சென்றடையும் இடமாக உள்ளதும் ஆகிய எம்பெருமானாரின் திருவடிகள் வாழவேண்டும். சூரியனும் வெட்கப்படும்படியாகச் சிவந்த காவி ஆடையானது வாழவேண்டும். அழகால் சிவந்துள்ள திருமேனி எப்போதும் வாழவேண்டும். அழகான திருமேனி என்ற கார்கால மேகத்தில் தோன்றும் மின்னல் போன்று காணப்படும் முப்புரிநூல் வாழவேண்டும். ஸம்ஸாரத்தில் ஆழ்ந்தவர்களைத் தூக்கி எடுக்கும் சக்தி உள்ளதும், இவ்விதம் எடுக்கவல்ல இரக்கம் போன்ற குணங்களால் பரந்து உள்ளதும், துளசி மாலை போன்ற பல மாலைகளை உடையதும் ஆகிய திருத்தோள்கள் வாழவேண்டும். பகவானுக்குச் செய்யும் கைங்கர்யம், அவன் அடியார்களைக் கண்ட மகிழ்ச்சி போன்றவற்றால் எப்போதும் மலர்ந்து பிரகாசமாகப் புன்முறுவல் கொண்டபடி உள்ள திருமுகம் வாழவேண்டும். தனது அடியார்களை இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுவித்த மகிழ்வாலும் பகவத் அனுபவத்தால் ஏற்பட்ட ஆனந்தத்தாலும் மலரானது மலர்கின்றது போன்று உள்ள புன்முறுவல் வாழவேண்டும். ஸ்ரீரங்கஸ்ரீ, ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ என்று போற்றப்படும் ஸ்ரீவைஷ்ணவம் ஆகிய இரண்டையும் காணும்போது களிப்புற்றும், அடியார்களைக் காணும்போது குளிரக் கடாக்ஷித்தும் உள்ள அழகான திருக்கண்கள் வாழவேண்டும். சிவந்த திருமேனியில் உள்ள பன்னிரண்டு நாமங்களின் அழகு வாழவேண்டும். பத்மாசனத்தில் அமர்ந்தபடி, ஞானமுத்திரை காட்டியபடி உள்ள அழகு எப்போதும் வாழவேண்டும்.

31. அறு சமயச் செடியதனை அடியறுத்தான் வாழியே
அடர்ந்து வரும் குதிட்டிகளை அறத்துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறுதும் அறத் தீர்த்துவிட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே
மறை அதனில் பொருள் அனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறன் உரைசெய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே
அறம்மிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே.

**பொருள்** - வேதங்களுக்கு விரோதமாகப் பேசிய கபிலர், பதஞ்ஜலி போன்ற ஆறு மதங்களையும் செடி போன்று எளிதாக அறுத்த எம்பெருமானார் வாழவேண்டும். வேதங்களுக்குத் தவறான பொருள் கற்பித்த இவர்கள் போன்ற பலரையும் அழித்த எம்பெருமானார் வாழ வேண்டும். இப்படிப்பட்ட மதங்கள் தோன்றக் காரணமாக உள்ள கலிபுருஷனை அடியுடன் துரத்திய எம்பெருமானார் வாழவேண்டும். பூர்ணமான அழகுடைய பெரியகோயிலின் நிர்வாகம் முழுமையும் சீர்ப்படுத்திய எம்பெருமானார் வாழவேண்டும். வேதங்களில் கூறப்படும் உயர்ந்த பொருள்கள் அனைத்தையும் உள்ளது உள்ளபடி ஸ்ரீபாஷ்யம் போன்றவை மூலம் விவரித்த எம்பெருமானார் வாழவேண்டும். நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதமாகிய திருவாய்மொழியை எங்கும் பரப்பிய எம்பெருமானார் வாழவேண்டும். பரிபூர்ண அழகுடன் உள்ள எம்பெருமானாரின் அழகான திருவடிகள் எப்போதும் வாழவேண்டும்.

32. சங்கர பாற்கர யாதவ பாட்ட ப்ரபாகரர் தங்கள் மதம்
சாய்வுற வாதியர் மாய்குவர் என்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலி இங்கு இனி வீறு நமக்கிலை என்று மிகத்தளர்நாள்
மேதினி நம்சுமை ஆறும் எனத் துயர் விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடுநாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே.

**பொருள்** - சங்கரர், பாஸ்கரர், யாதவப்ரகாஸர், பாட்ட மதம், பிரபாகர மதம் போன்ற அனைத்து மதங்களும் ஆதாரம் இல்லாமல் சாய்ந்தன; தவறான வாதம் மூலம் வேதங்களுக்கு முரணான பொருள் உரைத்த இவர்கள் மாய்ந்தனர் என்று வேதங்கள் கொண்டாடிய நாள்; மிகவும் கொடிய செயல்கள் புரியும் கலிபுருஷன், இனி இந்தப் பூமியில் நமது ஆட்சி செல்லாது என்று தளர்வுற்று ஓடிய நாள்; தனது மீது உள்ள தீயவர்களின் பாரம் இன்றுடன் தொலைந்தது என்று பூமி மகிழ்ந்த நாள்; திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார், பூர்வாச்சார்யர்கள் என்று பலருடைய பிரபந்தங்கள் மகிழ்ந்து நிற்கும் நாள்; பெரியபெருமாளான அழகியமணவாளன் என்றும் வாசம் செய்யும் திருவரங்கம், திருவேங்கடவன் என்றும் உறையும் திருமலை, மற்றும் உள்ள பல திவ்ய தேசங்கள் மகிழ்ந்து கொண்டாடும் நாள் - இத்தகைய நாள் எது? அழகான மீன்கள் நிறைந்த குளங்கள் பல உள்ளதும், அந்தக் குளங்களால் சூழப்பட்ட வயல்வெளிகள் நிறைந்ததும், எப்போதும் அலங்காரம் செய்யப்பட்டபடி உள்ளதும் ஆகிய ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்த எம்பெருமானாரின் ஜன்ம நக்ஷத்ரமான திருவாதிரை நாளே ஆகும்.

33. இன்னம் எத்தனை காலம் இந்த உடம்புடன் யான் இருப்பன்
இன்னபொழுது உடம்பு விடும் இன்னபடி அதுதான்
இன்னவிடத்தே அதுவும் என்னும் இவையெல்லாம்
எதிராசா! நீ அறிதி யான் இவை ஒன்றறியேன்
என்னை இனி இவ்வுடம்பை விடுவித்து உன் அருளால்
ஏராரும் வைகுந்தத்தேற்ற நினைவு உண்டேல்
பின்னை விரையாமல் மறந்து இருக்கிறதென்? பேசாய்
பேதைமை தீர்த்து என்னை அடிமை கொண்ட பெருமானே.

**பொருள்** - இன்னமும் எத்தனை நாட்கள் இந்த உடலுடன் நான் எனது (ஆத்மா) ஸ்வரூபத்திற்கு ஏற்காத வகையில் வாழ்ந்து வருவேன்? இந்த உடல் - இந்தக் காலத்தில் விழுந்துவிடும், இந்த முறையில் விழுந்து விடும், இந்த இடத்தில் விழுந்து விடும் போன்ற

அனைத்தையும் நீ அறிவாய்; இவை ஏதும் நான் அறிய மாட்டேன். எம்பெருமானாரே! எனது அறியாமையை நீக்கி உன்னிடம் அடிமை கொள்ளும்படிச் செய்த ஸ்வாமீ! இந்த உடலுடன் பொருத்தம் இல்லாமல் உள்ள என்னை உமது அருள் மூலம், இந்த உடலை விடும்படிச் செய்யவேண்டும். இதன் பின்னர் மிகவும் உயர்ந்த ஸ்ரீவைகுண்டத்திற்கு என்னை ஏற்ற வேண்டும். இவை உன் சிந்தையில் உள்ளது என்றால், மிகவும் விரைவாக இந்தச் செயல்களைச் செய்தருளாமல், ஏன் தாமதம் செய்து, மறந்து, ஏதும் பேசாமல் உள்ளாய்?

34. முன்னைவினை பின்னைவினை ஆரத்தம் என்னும்
மூன்று வகையான வினைத்தொகை அனைத்தும் யானே
என்னை அடைந்தோர் தமக்குக் கழிப்பன் என்னும் அரங்கர்
எதிராசா! நீயிட்ட வழக்கன்றோ? சொல்லாய்
உன்னை அல்லது அறியாத யான் இந்த உடம்போடு
உழன்று வினைப்பயன் புசிக்க வேண்டுவது ஒன்று உண்டோ?
என்னுடைய இருவினையை இறைப்பொழுதில் மாற்றி
ஏராரும் வைகுந்தத்து ஏற்றி விடாய் நீயே.

பொருள் - “என்னிடம் சரணம் என்று புகுந்தவர்களின் முன்வினை, பயன் அளிக்கத் தொடங்காத வினைகள், பலன் அளிக்கத் தொடங்கிய வினைகள் ஆகியவற்றை நான் நீக்கி விடுகிறேன்”, என்று திருவரங்கன் கூறினான் அல்லவா? இப்படிப்பட்ட திருவரங்கன் உனக்கு அடங்கியவன் அல்லவா? (நீ கூறுவதைக் கேட்பவன்) உன்னை அல்லாமல் வேறு புகலிடம் யாரையும் நான் அடையவில்லை. இப்படி உள்ளபோது, இந்த உடலுடன் கூடி நின்று எனது பாவபலன்களை நான் தொடர்ந்து அனுபவிப்பதில் என்ன நியாயம் உள்ளது? எனது வினைப்பயன்களை மிகவும் விரைவாகப் போக்கி, அழகான ஸ்ரீவைகுண்டத்திற்கு நீயே ஏற்றி விட வேண்டும்.

35. அருளாலே அடியேனை அபிமானித்தருளி
அநவரதம் அடிமை கொள்ள நினைத்து நீயிருக்க
மருளாலே புலன் போக வாஞ்சை செய்யும் என்றன்
வல்வினையை மாற்றி உன்பால் மனம் வைக்கப் பண்ணாய்
தெருளாரும் கூரத்தாழ்வானும் அவர் செல்வத்
திருமகனார் தாமும் அருளிச்செய்த தீமைத்
திரளான அத்தனையும் சேரவுள்ள என்னைத்
திருத்தி உய்யக்கொள்ளும் வகை தேரும் எதிராசா.

**பொருள்** – எம்பெருமானாரே! உனது கருணை காரணமாக என்னை அரவணைத்து, அதன் பின்னர் உனது அடிமையாக்கிக் கொள்ள நீ மனம் கொண்டுள்ளாய். இதனை நான்

உணராமல், எனது அறியாமை காரணமாக, இந்த்ரியங்களுக்கு இன்பம் அளிக்கவல்ல கர்மங்களையே இயற்றியபடி இருந்தேன். இப்படிப்பட்ட எனது கர்மங்களை மாற்றி, உன்னிடம் மனம் வைக்கும்படிச் செய்யவேண்டும். மிகுந்த ஞானம் உள்ள கூரத்தாழ்வானும், அவருடைய புத்திரரான பராசரபட்டரும் தங்கள் அடக்கம் காரணமாகத் தாங்கள் கொடிய பாவங்கள் செய்தவர்கள் என்று கூறிக் கொண்டனர். ஆனால் என் விஷயத்தில் அவை உண்மையாக உள்ளன. ஆகவே எனது பாவ வினைகளை நீக்கி, என்னைத் திருத்தி ஆட்கொள்ளும் வழியை நீயே அருளவேண்டும்.

36. வாசனையில் ஊற்றமோ மாளாத வல்வினையோ
ஏதென்று அறியேன் எதிராசா – தீதாகும்
ஐம்புலனில் ஆசை அடியேன் மனந்தன்னை
வன்புடனே தான் அடரும் வந்து.

**பொருள்** - எம்பெருமானாரே! இந்த ஆத்மாவிற்கு எப்போதும் பகையாக உள்ள ”உலகவிஷயங்களின் மீது ஆசை” என்ற சிந்தனையானது, மிகவும் வேகத்துடன் தானாகவே வந்து என் மனதில் புகுந்து விடுகிறது. இதற்கான காரணம் – எல்லையற்ற காலம் இத்தகையை பாவ வாசனையிலே ஊறியுள்ள நிலையா? எத்தனை ப்ராயச்சித்தம் செய்தபோதிலும் கழியாமல் உள்ள எனது வலிமையான கர்மபலனா? இதனை நான் அறியவில்லை (நீ அறிந்து என்னை மீட்க வேண்டும்).

37. இன்றளவும் இல்லாத அதிகாரம் மேலும் எனக்கு
என்று உளதாம் சொல்லாய் எதிராசா - குன்றா
வினைத்தொடரை வெட்டிவிட்டு மேலை வைகுந்தத்து
என்னைக் கடுக ஏற்றாதது என்?

**பொருள்** - பரமபதம் ஏறவல்ல அதிகாரம் (தகுதி) இது நாள் வரை எனக்கு ஏற்படவில்லை. இனி எந்தக் காலத்தில் ஏற்படும்? இதனை நீயே அருளிச்செய்யவேண்டும். மலை போன்று குவிந்துள்ள எனது வினைப்பயன்களை வெட்டி எறிந்து, மிகவும் உயர்ந்த பரமபதத்தில், மிகவும் விரைவாக என்னை ஏற்றாமல் உள்ளதன் காரணம் என்ன?

38. அஞ்சில் அறியாதார் ஐம்பதிலும் தாமறியார்
என்சொல் எனக்கோ எதிராசா – நெஞ்சம்
உன் தாள் ஒழிந்தவற்றையே உகக்க இன்றும்
அனுதாபம் அற்று இருக்கையால்.

**பொருள்** – எம்பெருமானாரே! தாழ்ந்த விஷயங்களையே நாடியபடி உள்ள என் மனம், அனைவருக்கும் தலைவரான உனது திருவடிகளில் மயங்கியபடி இருத்தல் வேண்டும். ஆயினும் இந்த மனம், இது போன்று செய்யாமல் மற்ற விஷயங்களையே நாடியபடி உள்ளது. இதனால்தான், "ஐந்தில் அறியாதவர்கள் ஐம்பதில் அறியப்போகிறார்களா" என்ற பழமொழி என்னைக் குறித்தே உதித்தோ?

39. வேம்பு கறியாக விரும்பினார் கைத்ததென்று
தாம் புகடாதே புசிக்கும் தன்மைபோல் – தீம்பன் இவன்
என்று நினைத்து என்னை இகழார் எதிராசர்
அன்று அறிந்து அங்கீகரிக்கையால்.

**பொருள்** - வேப்ப இலை மிகவும் கசப்பானது. ஆயினும் ஒரு சில காரணங்களுக்காக (மருத்துவ) அதனை விலக்காமல், உணவுடன் சேர்த்து உண்பார்கள். இது போன்று, என்னைத் தீயவன் என்று தள்ளாமல் எம்பெருமானார் செய்தது என்ன? சரியான நேரத்தில் "இவன் காப்பாற்றப்படவேண்டியவன்", என்று தனது கருணை காரணமாக எனது தோஷங்களை நீக்கி என்னை ஏற்றுக்கொண்டார்.

40. அவத்தே பொழுதை அடியேன் கழித்துப்
பவத்தே இருக்கும் அது பண்போ? – திவத்தே யான்
சேரும் வகை அருளாய் சீரார் எதிராசா
போரும் இனி இவ்வுடம்பைப் போக்கு.

**பொருள்** - எம்பெருமானாரே! உனது அடிமையான நான், உனது கைங்கர்யங்கள் என்ற இன்பத்தை அனுபவிக்க வேண்டிய காலம் முழுவதும் வீணாகக் கழிக்கிறேன். இவ்விதம் ஆத்மாவின் இயல்புக்கு விரோதியாக உள்ள இந்த ஸம்ஸாரத்தில் நான் ஈடுபட்டபடி இருக்கும் நிலையானது, உன்னுடைய இயல்பான கருணைக்குப் பண்பாகுமா? விரைவாக பரமபதத்தை நான் அடையும் வழியை அருளவேண்டும். ஸம்ஸாரம் என்ற சிறையில் வாடும் இந்த உடலை நீக்கி அருளவேண்டும்.

41. எனைப்போல் பிழைசெய்வார் இவ்வுலகில் உண்டோ
உனைப்போல் பொறுக்கவல்லார் உண்டோ? – அனைத்து உலகும்
வாழப் பிறந்த எதிராச மாமுனிவா
ஏழைக்கு இரங்காய் இனி.

**பொருள்** - இந்த உலகில் என்னைப் போன்று தவறுகளை மட்டுமே செய்பவர்கள் தேடிப் பார்த்தாலும் கிடைப்பார்களா? உன்னைப் போன்று அனைத்துத் தவறுகளையும் பொறுத்துக் கொள்பவர்கள் பரமபதத்திலும் கிடைப்பார்களா? அனைத்து உலகங்களிலும் உள்ள உயிர்கள் வாழும்படி அவதரித்த எதிராசன் என்ற திருநாமம் கொண்ட முனிவனே! ஸம்ஸாரத்தில் உள்ள எனக்கு தயை செய்யவேண்டும்.

42. ஐம்புலன்கள் மேலிட்டு அடரும்பொழுது அடியேன்
உன் பதங்கள் தம்மை நினைத்து ஓலமிட்டால் – பின்பு அவைதாம்
என்னை அடராமல் இரங்காய் எதிராசா
உன்னை அல்லாமல் எனக்கு உண்டோ?

**பொருள்** - ஐந்து புலன்களும் என்னை ஆக்கிரமித்து, உலக விஷயங்களில் ஈடுபட வைக்கும்போது, உனது அடிமையான நான் உன்னுடைய திருவடித் தாமரைகளை எண்ணியபடி, "இராமானுசா" என்று அழைக்கிறேன். இதன் பின்னர் இவ்விதம் என்னை எனது புலன்கள் பாதிக்காமல் அருள் செய்யவேண்டும். எம்பெருமானாரே! உன்னைத் தவிர என்னைக் காக்க வேறு யார் உள்ளனர்?

43. இந்த உலகில் பொருந்தாமை ஏதுமில்லை
அந்த உலகில் போக ஆசையில்லை – இந்த நமக்கு
எப்படியேதான் தருவர் எந்தை எதிராசர்
ஒப்பில் திருநாடு உகந்து.

**பொருள்** – இந்த உலகில் உள்ள உலகவிஷயங்கள் மீது கொண்ட பற்றுதல்கள் நீங்கவில்லை. மிகவும் உயர்ந்த பரமபதத்தை அடையும் ஆசையும் எனக்கு ஏற்படவில்லை. இவ்விதம் உள்ள நமக்கு, எனது தந்தையான எம்பெருமானார் ஒப்பற்ற பரமபதத்தை எந்த அடிப்படையில், மனம் விரும்பிக் கொடுப்பார்?

44. மாகாந்த நாரணனார் வைகும்வகை அறிந்தோர்க்கு
ஏகாந்தம் இல்லை இருள் இல்லை – மோகாந்தர்
இவ்விடம் ஏகாந்தம் இருள் என்று பயம் அற்று இருந்து
செய்வர்கள் தாம் பாவத்திறம்.

**பொருள்** - மஹாலக்ஷ்மியின் நாயகனான ஸ்ரீமந்நாராயணன் அனைத்து உயிர்களின் உள்ளும் புறமும் உள்ளான் என்பதை அறிந்தவர்களுக்கு தனிமை என்பதே இல்லை (அதாவது அவர்கள் தாங்கள் மட்டுமே இல்லை, தங்களுடன் எம்பெருமான் எப்போதும் உள்ளான் என்ற ஞானம் உள்ளவர்கள்). இதனால் அவர்கள் எங்கும் பாவம் செய்யமாட்டனர். ஆனால் இந்த உண்மையை அறியாதவர்கள், சில இடங்களில் இருள் உள்ளது என்று எண்ணி, பயம் இல்லாமல் பாவங்களைச் செய்வர்.

45. நாராயணன் திருமால் நாரம் நாம் என்னும் முறை
ஆராயில் நெஞ்சே அனாதி அன்றோ – சீராரும்
ஆசாரியனாலே அன்றோ நாம் உய்ந்தது என்று
கூசாமல் எப்பொழுதும் கூறு.

**பொருள்** - எனது மனமே! நாம் நாரம் (நரர்கள்) என்றும், நமக்கும் நாராயணனுக்கும் உள்ள தொடர்பு எல்லையற்ற காலமாக உள்ளது என்றும் கூறுவதை மறுக்க இயலுமா? இத்தகைய உறவுமுறையை நமக்கு உணர்த்தியவர் நமது ஆசார்யன் அல்லவா? ஆகவே, ”ஆசார்யன் மூலமாக மட்டுமே நாம் உயர்ந்தோம்”, என்று எப்போதும் வெட்கம் இல்லாமல் கூறுவாயாக.

46. திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோந்தம்மைக்
குருவாகி வந்து உய்யக்கொண்டு - பொருவில்
மதி தான் அளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே
எதிராசர்க்கு ஆளானோம் யாம்.

**பொருள்** - எனது மனமே! தீய வினைகள் சூழ்ந்த நம்மை, நாம் உள்ள இடம் தேடி வந்து, நமக்குக் குருவாக நின்று, திருவாய்மொழிப்பிள்ளை காத்து அருளினார். மேலும் சாஸ்திர ஞானம் போன்று அல்லாமல், திருமந்திரத்தால் பிறக்கும் ஞானத்தை அளித்தார். இதன் மூலம் அல்லவோ நாம் எம்பெருமானாரின் தொடர்பு பெற்று, அவருக்கு அடிமையானோம்?

47. இராமானுசாய நமவென்று இரவும் பகலும் சிந்தித்து
இரா மானுசர்கள் இருப்பிடம் தன்னில் இறைப்பொழுதும்
இரா மானுசர் அவர்க்கு எல்லா அடிமையும் செய்யவெண்ணி
இரா மானுசர் தம்மை மாநுசராக என்கொல் எண்ணுவதே.

**பொருள்** - எம்பெருமானாரை மட்டுமே சிந்தித்து, “இராமானுசாய நம:“ என்று இரவும் பகலும் கூறாமல் உள்ள மனிதர்கள் வாழும் இடத்தில் வசிக்கவே கூடாது. இவ்விதம் அங்கு வசிக்காத மனிதர்களுக்கு மட்டுமே நாம் கைங்கர்யம் செய்யவேண்டும். “இராமானுசாய நம:” என்று கூறாத மனிதர்களை, மனிதர்கள் என்று எப்படி எண்ண முடியும்?

48. எண்ணாது என்னெஞ்சம் இசையாது என் நாவு இறைஞ்சாது சென்னி
கண்ணானவை ஒன்றும் காணலுறா கலியார் நலிய
வொண்ணாத வண்ணம் உலகு அளித்தோன் எதிராசன் அடி
நண்ணாதவரை அரங்கேசர் செய்த நலம் நமக்கே.

**பொருள்** - இந்த உலகில் உள்ளோர், இந்தக் கலியுகத்தில், கலியின் பிடியில் சிக்காதபடி எம்பெருமானார் காத்தார். அப்படிப்பட்ட எம்பெருமானாரின் திருவடிகளை அண்டாதவர்களைக் குறித்து எனது மனம் எப்போதும் எண்ணாது, என் வாக்கு அவர்களைத் துதிக்காது, எனது தலை அவர்களை வணங்காது, எனது கண்கள் அவர்களைக் காணாது. இது போன்று, எனது மனதுக்கு ஏற்ப என்னுடைய உடல் உறுப்புகள் ஒத்துழைப்பது என்ற செயலானது, எனக்குத் திருவரங்கனான அழகியமணவாளன் செய்த நன்மையாகும்.

49. நந்தா நரகத்து அழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்
என் தாதையான எதிராசனை நண்ணும் என்றும் அவன்
அந்தாதி தன்னை அநுசந்தியும் அவன் தொண்டருடன்
சிந்தாகுலம் கெடச் சேர்ந்திரும் முத்தி பின் சித்திக்குமே.

**பொருள்** - இந்த மண்ணில் உள்ள மக்களே! எத்தனை அனுபவித்தாலும் முடிந்து விடாத ஸம்ஸாரம் என்ற நரகத்தில் சிக்காமல் இருக்க வேண்டும் என்று நீங்கள் எண்ணினால் என்ன செய்யவேண்டும்? என்னுடைய தந்தையான எம்பெருமானாரை அண்டி இருங்கள். மோக்ஷம் புகுவதற்கு ஏதுவாக உள்ள எம்பெருமானாரின் திருநாமத்தை ஒவ்வொரு பாசுரத்திலும் கூறும்படி அமைந்துள்ள ப்ரபந்நகாயத்ரீ என்னும் இராமானுச நூற்றந்தாதியை எப்போதும் கூறி வாருங்கள். எம்பெருமானாரின் திருவடிகளில் மட்டுமே

ஆசை கொண்ட அடியார்களுடன், உங்கள் மனத்துன்பம் அனைத்தும் நீங்கும்படிச் சேர்ந்து இருங்கள். அதன் பின்னர் மோக்ஷம் என்பது எந்த ஐயமும் இன்றிச் சித்திக்கும்.

50. அவத்தே அருமந்தகாலத்தைப் போக்கி அறிவின்மையால் இப்
பவத்தே உழல்கின்ற பாவியர்காள் பல காலம் நின்று
தவத்தே முயல்பவர் தங்கட்கும் எய்தவொண்ணாத வந்தத்
திவத்தே உம்மை வைக்கும் சிந்தியும் நீர் எதிராசரென்று.

**பொருள்** - எம்பெருமானாரின் திருநாமத்தை எப்போதும் கூற ஏற்றதாக உள்ள சிறந்த காலம் அனைத்தையும், அறிவு இல்லாமல் உலக விஷயத்தில் ஈடுபட்டு வீணாக்குபவர்களே! ஸம்ஸாரத்திலேயே உழல்கின்ற பாவிகளே! உங்கள் மனதால், "எதிராசா", என்று எப்போதும் சிந்தித்தபடி இருங்கள். இதன் மூலம் எப்போதும் தவம் செய்தபடி இருக்கின்ற தவசிகளுக்கும் எளிதில் கிட்டாத பரமபதம் உங்களுக்கு மிகவும் எளிதாகக் கிட்டிவிடும். அங்கு உங்களை நித்யஸூரிகளுடன் எம்பெருமானார் சேர்த்து வைப்பார்.

51. என்றுளன் ஈசன் உயிரும் அன்றேயுண்டு இக்காலம் எல்லாம்
இன்றளவாகப் பழுதே கழிந்த இருவினையால்
என்று இழவின்றி இருக்கும் என்னெஞ்சம் இரவு பகல்
நின்று தபிக்கும் எதிராசா நீயருள் செய்த பின்னே.

**பொருள்** - எப்போதும் உள்ள ஈச்வரன் எப்போதிலிருந்து உள்ளானோ, அப்போதிலிருந்து ஜீவனும் உள்ளான். அந்தக் காலம் தொடங்கி, இப்போதுவரை புண்ணிய பாவ கர்மங்களிலேயே காலம் கழிந்தது. இதுநாள் வரை இதனைப் பற்றி என்னுடைய நெஞ்சம் வருத்தாமல் இருந்தது. எம்பெருமானாரே! நீ எனக்கு அருள் செய்த பின், எனது இத்தகைய நிலைக்கு இரவும் பகலும் வருந்தியபடி உள்ளேன்.

52. கனககிரிமேல் கரிய முகில் போல்
வினதை சிறுவன் மேற்கொண்டு – தனுவிடும்போது
ஏரார் அரங்கர் எதிராசர்க்காக என்பால்
வாரா முன்னிற்பர் மகிழ்ந்து.

**பொருள்** - என்னுடைய உடலை நான் விடுகின்ற நேரத்தில், எம்பெருமானாருக்காக நடப்பது என்ன என்றால் - ஸ்வர்ணமயமான மேரு மலையின் மீது படியும் நீலமேகம் போன்று, வினதை என்னும் பெண்ணின் புத்திரனான கருடனை வாகனமாகக் கொண்டு

வருவது யார் என்றால் - பூரணமான அழகுள்ள திருவரங்கன் ஆவான். அவன், நான் உயிர்விடும் இடம் தேடி வந்து, புன்னகையுடன் நிற்பான்.

53. இதத்தாலே தென்னரங்கர் செய்கிறது என்றறிந்தே
இருந்தாலும் தற்கால வேதனையின் கனத்தால்
பதைத்து ஆவோ என்னும் இந்தப் பாவ உடம்புடனே
பல நோவும் அநுபவித்து இப்பவத்து இருக்கப்போமோ
மதத்தாலே வில்வினையின் வழி உழன்று திரிந்த
வல்வினையேன் தன்னை உனக்கு ஆளாக்கிக் கொண்ட
இதத்தாயும் தந்தையுமாம் எதிராசா! என்னை
இனிக் கடுக இப்பவத்தினின்று எடுத்தருளே.

**பொருள்** - இப்போது அனுபவிக்கும் வேதனைகள் எனது கர்மத்தால் வந்தவை ஆகும். இதனை இங்கேயே நான் அனுபவித்துக் கழித்துவிட வேண்டும் என்று திருவரங்கன் தனது கருணை காரணமாக முடிவு செய்தான். இதனால்தான் நான் இத்தனை துன்பங்கள் அனுபவிக்கிறேன் என்று அறிவேன். ஆயினும், அந்தந்த காலத்தில் ஏற்படும் வேதனையின் துன்பங்களை என்னால் தாங்க இயலவில்லை. இத்தனை வேதனையை இந்த உடல் கொண்டு, நோய்வாய்ப்பட்ட உடல் கொண்டு, அனுபவிக்க இயலுமா? இந்த உடலின் தொடர்பால் கர்மத்தின் வழி நின்று, பாவத்தின் உருவமாகவே நின்றேன். அந்த நேரத்தில் என்னை உன்னுடைய அடிமை ஆக்கிக் கொண்ட, எனது தாயும் தந்தையுமான எம்பெருமானாரே! இந்த ஸம்ஸாரத்தில் இருந்து மிகவும் விரைவாக என்னை எடுத்துக் கொள்ளவேண்டும்.

54. இன்னம் எத்தனை நாள் இவ்வுடம்புடன்
இருந்து நோவு படக்கடவேன் ஐயோ
என்னை இதினின்றும் விடுவித்து நீர்
என்றுதான் திருநாட்டினுள் ஏற்றுவீர்
அன்னையும் அத்தனும் அல்லாத சுற்றமும்
ஆகி என்னை அளித்தருள் நாதனே
என் இதத்தை இராப்பகல் இன்றியே
ஏகம்மெண்ணும் எதிராச வள்ளலே.

பொருள் – என் மீது பாசம் கொண்ட அன்னையும், தந்தையும், அனைத்து விதமான உறவினர்களும் போன்று உள்ள எனது ஸ்வாமியே! எம்பெருமானாரே! இரவு, பகல் என்று பாராமல் எப்பொழுதும் என்னுடைய நன்மையை மட்டுமே எண்ணி இருக்கும் யதிராச வள்ளலே! இன்னமும் எத்தனை காலம் இந்த உடலில் சிக்குண்டு நான்

வேதனைப் படவேண்டும்? இந்த்த் துன்பத்தில் இருந்து விடுவித்து, என்னைப் பரமபதத்தில் என்று ஏற்றப் போகிறாய்?

55. தென்னரங்கர் சீர் அருளுக்கு இலக்காகப் பெற்றோம்
திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்
மன்னிய சீர் மாறன் கலை உணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்
முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம்
முழுதும் நமக்கு அவை பொழுதுபோக்காகப் பெற்றோம்
பின்னை ஒன்றுதனில் நெஞ்சு பேராமல் பெற்றோம்
பிறர் மினுக்கம் பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோமே.

**பொருள்** – எம்பெருமானாரே! அன்புடன் தென்திசை நோக்கிப் பள்ளி கொண்ட பெரியபெருமாளின் கருணையை எங்கள் இலட்சியமாகப் பெற்றோம். திவ்யதேசங்களில் முதலாவதாக உள்ள திருவரங்கத்தில் வாசம் செய்யும் உயர்ந்த நிலையைப் பெற்றோம். உயர்ந்த கல்யாண குணங்கள் நிரம்பிய நம்மாழ்வாரின் திருவாய்மொழியை அன்னமாக உண்ணப் பெற்றோம். "தேவு மற்று அறியேன்" என்று அருளிய மதுரகவி ஆழ்வாரைப் போன்று உன்னுடைய தொடர்பைப் பெற்றோம். நமது பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த ரஹஸ்யங்களைக் கற்றோம். அந்த ரஹஸ்யங்களையே காலக்ஷேபம் செய்தபடி பொழுது போக்கினோம். இதைத் தவிர வேறு எதனிலும் மனம் செல்லாமல், இவற்றைக் கற்பதில் மனம் சலிக்காமல் உள்ள வாய்ப்பைப் பெற்றோம். "இவ்வாறு இருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள்" என்று மற்றவர்கள் பொறாமை இல்லாமல் போற்றும் பெருமையையும் பெற்றோம்.

56. உந்தன் அபிமானமே உத்தாரகம் என்று
சிந்தை தெளிந்திருக்கச் செய்த நீ - அந்தோ
எதிராசா! நோய்களால் என்னை நலக்காமல்
சதிராக நின் திருத்தாள் தா.

**பொருள்** - எம்பெருமானாரே! உன்னுடைய அபிமானமே எனது ஆத்மாவிற்கு ஏற்றது என்று எனது மனதைத் தெளிய வைத்தாய். அந்தோ! உடல் வேதனைகள் என்னைப் பாதிக்காமல், மிகவும் விரைவாக உனது திருவடிகளை அளித்து அருளவேண்டும்.

57. தேசிகர்கள் போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை
வாசமலர் தாள் அடைந்த வத்துவென்று – நேசத்தால்
என் பிழைகள் காணா எதிராசரே - அடியேன்
புன்பகர்வை கேளும் பொறுத்து.

**பொருள்** – எம்பெருமானாரே! மிகவும் சிறந்த ஞானம் உள்ளவர்கள் போற்றும்படியான பெருமை உள்ள திருவாய்மொழிப்பிள்ளையின், தாமரை போன்ற நறுமணத்துடன் கூடிய அழகான திருவடிகளை அடைந்தேன். இந்த ஒரு காரணத்தால் மட்டுமே என்னுடைய பிழைகளை, நீ காணாமல் இருக்க வேண்டும். நான் கூறிய பிழைகள் நிறைந்த இந்தச் சொற்களைக் கேட்டுக் கோபம் கொள்ளாமல், அன்புடன் சகித்துக் கொள்ளவேண்டும்.

58. எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால்
உன்தன் உறவை உணர்த்தியபின் இந்த உயிர்க்கு
எல்லா உறவும் நீ என்றே எதிராசா
நில்லாதது உண்டோ என்னெஞ்சு.

**பொருள்** – எம்பெருமானாரே! என்னுடைய தந்தையான திருவாய்மொழிப்பிள்ளையின் கருணையால் உன்னுடைய திருவடிகளின் உறவு எனக்கு ஏற்பட்டது. இவ்விதம் உள்ள தொடர்பை அறிந்த ஆத்மாவிற்கு அனைத்து உறவும் நீயே அல்லவா? அதன் பின்னர் எனது மனமும் "அனைத்தும் நீயே" என்று உணர்ந்து நின்றது அல்லவா?

59. எந்தை திருவரங்கர் ஏரார் கருடன் மேல்
வந்து முகம் காட்டி வழிநடத்தச் சிந்தை செய்து இப்
பொல்லா உடம்பு தனைப் போக்குவது எந்நாள் கொலோ
சொல்லாய் எதிராசா! சூழ்ந்து.

**பொருள்** - என்னுடைய தாயும் தந்தையுமாக உள்ள ஸ்ரீரங்கநாதன், அழகான கருடன் மீது எழுந்தருளி, எனது உடல் விடுகின்ற நேரத்தில் செய்வது என்னவென்றால் – மிகவும் அழகான கஸ்தூரி திருநாமத்தையும், புன்முறுவலைக்கொண்ட அழகான திருமுகத்தையும் காட்டியபடி, அர்ச்சிராதி மார்க்கத்தில் என்னை வழிநடத்திக் கொண்டு போவான். எம்பெருமானாரே! இதனை எண்ணியபடியே உடலை உனது கைங்கர்யத்திற்காக விடுவது எப்போது என்று நீயே கூற வேண்டும்.

60. இந்த அரங்கத்து இனிது இரு நீயென்று அரங்கர்
எந்தை எதிராசர்க்கு ஈந்த வரம் சிந்தை செய்யில்
நம்மதன்றோ நெஞ்சம் நற்றாதை சொம் புதல்வர்
தம்மதன்றோ தாயமுறைதான்.

**பொருள்** - திருவரங்கத்தின் நாயகனான நம்பெருமாள் என்னுடைய தந்தையான எம்பெருமானாருக்கு அளித்த வரம் "ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" - இந்தக் கோயிலிலே நீவிர் சுகமாக வசித்து வருவீர் - என்பதாகும். இந்த வரத்தை நாம் சிந்தை செய்தபடி இருந்தால், இந்த வரம் நமக்கும் பொருந்தும். எப்படி என்றால் - தந்தையின் சொத்து முழுவதும் புதல்வருக்குச் சேர்வது அல்லவா முறையாகும்?

இதன் மூலம் உபயவிபூதிச் செல்வத்தைப் பெற்று, பெரியபெருமாளின் கருணையைப் பெற்று, திருமாமணி மண்டபத்தில் உள்ள எம்பெருமானாரின் திருவடிகளிலேயே கைங்கர்யம் செய்யதபடி இருத்தல் வேண்டும் என்று, பெரியஜீயர் எனப் போற்றப்படும் ஸ்வாமி மணவாளமாமுனிகள் செய்தருளிய ப்ரார்த்தனை நிறைவு பெற்றது.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்த
ஆர்த்திப் பிரபந்தம்
ஸம்பூர்ணம்

திருவரங்கத் திவ்ய தம்பதிகள் திருவடிகளே சரணம்

திருவரங்கத் திவ்ய தம்பதிகளைத் தஞ்சம் அடைந்த
நம் இராமாநுசன் திருவடிகளே சரணம்

இராமாநுசனின் திருவடிகளைத் தஞ்சம் அடைந்த
நம் மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்